
# திகைக்க வைக்கும் ‘தேசப் பொக்கிஷம்’

உலகிலே அதிகமான நாடுகளில் ஸ்டாம்புகள் மூலம் கவுரவிக்கப்பட்ட ஒரே தலைவர், காந்திஜி மட்டுமே. அவரது சிறுவயது பருவம் முதல் இறுதிக்காலம் வரையிலான பல்வேறு தோற்றங்கள் தபால்தலைகளாக வடிவமைக்கப்பட்டு உலகம் முழுக்க வெளி வந்துள்ளன.

காந்திஜியின் முதல் தபால் தலையே ஒரு நெகிழ்ச்சியான பின்னணியோடுதான் வெளியானது.

காந்திஜியின் 80–வது பிறந்த நாளில் முதல் தபால்தலையை வெளியிடவேண்டும் என்று சுதந்திர இந்தியாவின் தலைவர்கள் ஒன்றுகூடி முடிவு செய்தனர். அது, மகாத்மாவுக்கு நாடு செலுத்தும் மிகப்பெரிய கவுரவமாக இருக்கும் என்று கருதி, நான்கு விதமான ஸ்டாம்புகளை வடிவமைத்தனர். காந்திஜிக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கவேண்டும் என்று கருதி, அன்றைய பிரதமர் ஜவகர்லால் நேரு அதை ரகசியமாகவைத்து, தானே முன்நின்று அந்த வடிவமைப்பு பணிகளை மேற்கொண்டார். ஆனால் வெண்ணை திரண்டு வரும்போது தாழி உடைந்த கதைபோல், ஸ்டாம்ப் வடிவமைப்பு முழுமை பெறும் காலகட்டத்தில் (1948–ம் ஆண்டு ஜனவரி 30–ந்தேதி) காந்திஜி சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டார். தனது படத்தோடு ஸ்டாம்ப் தயாரிக்கப்பட்டது தெரியாமலே காலமாகிவிட்டார். அந்த நான்கு வித ஸ்டாம்புகளும் 1948–ம் ஆண்டு சுதந்திர தின விழாவில் தான் வெளியிடப்பட்டது.



விலைமதிப்பற்ற காந்திஜி ஸ்டாம்ப்.

சுதேசியாகவே வாழ்ந்து, முழு வாழ்க்கையையும் நாட்டிற்காக அர்ப்பணித்த மகாத்மாவின் அந்த ஸ்டாம்புகள் சுவிட்சர்லாந்தில் அச்சடிக்கப்பட்டது என்பது ஆச்சரியமான செய்தி. (அவைகளை தவிர்த்து, 1926–ம் ஆண்டில் இருந்து இன்று வரை நம் நாட்டில் வெளியிடப்படும் அனைத்து ஸ்டாம்புகளும் உள்நாட்டில்தான் அச்சடிக்கப்படுகிறது. காந்திஜியின் ஸ்டாம்ப் வெளிநாட்டில் அச்சடிக்கப்பட்ட அதே ஆண்டில், நாசிக்கில் ஸ்டாம்ப், கரன்சி, நாணயம் உருவாக்கும் அச்சகங்களும், ஆலைகளும் நவீனப்படுத்தப்பட்டன)

அந்த அபூர்வ ஸ்டாம்புகள் காந்திஜியின் நினைவாக 1948–ம் ஆண்டு வெளியிடப்பட்டபோது ராஜாஜி இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தார். அவர் சிறப்புமிகுந்த அந்த அஞ்சல்தலைகளை அவரது அதிகாரபூர்வ தேவைகளுக்கு பயன்படுத்த விருப்பம் தெரிவித்தார். அதனால் அரசு தேவைகளுக்காக பயன்படுத்தும் ‘சர்விஸ்’ என்ற வாசகம் அதில் பொறிக்கப்பட்டது. இதில் இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால், உலகிலே மிக குறைவாக அச்சிடப்பட்ட ஸ்டாம்ப் என்ற பெருமையை அவை பிடித்திருக்கின்றன. 100 ஸ்டாம்புகள் மட்டுமே அந்த டிசைனில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. அதனால் அது உலகில் விலைமதிப்புமிக்க அஞ்சல்தலையாக போற்றப்படுகிறது. அரிதான இந்த பொக்கிஷத்தின் மதிப்பு ரூ.1 கோடிக்கு மேல். கடந்த வருடம் லண்டனில் இந்த ஸ்டாம்ப் ஒன்று ஏலத்தில் விடப்பட்டது. அது 92 லட்சம் ரூபாய்க்கு ஏலம்போனது.

காந்திஜிக்கு முதன்முதலில் அஞ்சல்தலை வெளியிட்ட வெளிநாடு, அமெரிக்கா. 1961–ம் ஆண்டு ஜனவரி 26–ல் அது வெளியிடப்பட்டது. காங்கோ நாடு 1967–ல் வெளியிட்டு இரண்டாம் இடத்தைப் பிடித்தது.



காந்திஜி உருவத்துடன் முதன்முதலில் வெளியிடப்பட்ட அமெரிக்க தபால்தலைகள்.

1969–ம் ஆண்டு காந்திஜியின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. அப்போது 40 நாடுகள் பல்வேறு விதமான ஸ்டாம்புகளை வெளியிட்டு மகாத்மாவை பெருமைப்படுத்தின. காலம் அடுத்த நூற்றாண்டை தொட்ட பின்பும், இந்த சாதனை இன்னும் முறியடிக்கப்படவில்லை.


காந்திஜியின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் நினைவாக பூட்டான் இரண்டு தபால்தலைகளையும், சோமாலியா மூன்று வித தபால்தலைகளையும் வெளியிட்டன. இதன் பின்னணியில் இருக்கும் சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், மேற்கண்ட ஐந்தும் இந்தியாவில் நாசிக்கில் அச்சிடப்பட்டதாகும்.

மகாத்மாவின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டபோது, உலகம் முழுக்க நாற்பது நாடுகள் நினைவு தபால்தலைகளை வெளியிட்டதால், அப்போது அந்த செய்தி இங்கிலாந்து பாராளுமன்றத்தில் எதிரொலித்தது. ‘விடுதலைப் போரில் நமக்கு நடந்ததை நினைத்து நாம் வெட்கப்படவேண்டியதில்லை. உலகமே அந்த மாமனிதரை நினைவுகூறும் போது நாமும் அவருக்கு புகழ் அஞ்சலி செலுத்தித்தான் ஆகவேண்டும். அதற்காக ஸ்டாம்ப் வெளியிடவேண்டும்’ என்று பெரும்பாலான எம்.பி.க்கள் வற்புறுத்தினார்கள். அதை தொடர்ந்து, முதல் முறையாக தன் நாட்டு தலைவர் அல்லாத மற்றவருக்கு ஸ்டாம்ப் வெளியிட இங்கிலாந்து முடிவுசெய்து, காந்திஜிக்கு அந்த பெருமையை வழங்கியது. அந்த ஸ்டாம்பை வடிவமைத்தவர் இந்தியரான பீமன் முல்லிக். அந்த ஸ்டாம்ப் கொல்கத்தாவில் 1970–ல் நடந்த காந்திஜி தபால்தலை கண்காட்சியில், சிறந்த டிசைனுக்கான முதல் பரிசை பெற்றது.



இங்கிலாந்து வெளியிட்ட காந்திஜியின் தபால்தலை.

வெளிநாடுகள் வெளியிட்டிருக்கும் ஸ்டாம்புகள் ஏராளம் என்பதால், காந்திஜியின் பல்வேறு முகபாவங்கள், தோற்றங்கள் ஸ்டாம்புகளில் இடம் பிடித்துள்ளன. உட்கார்ந்து எழுதுவது, பேப்பர் படிப்பது, தொண்டர்களுடன் நடந்து வருவது, கும்பிடுவது, ரெயிலில் இருந்து இறங்குவது, சிரிப்பது, நூல் நூற்பது, தியானம் செய்வது, சிறுவன் ஒருவன் கம்பை பிடித்தபடி அவரை அழைத்து செல்வது, டெலஸ்கோப் பார்ப்பது, சைக்கிளில் செல்வது.. இப்படி நீள்கிறது காட்சிகள். அவர் மரணமடைந்து கிடப்பதும் ஸ்டாம்ப் ஆக்கப்பட்டுவிட்டது.


சைக்கிள் ஓட்டும் காந்திஜி ஸ்டாம்ப்

எதற்குமே அஞ்சாத, எதற்குமே வருத்தப்படாத காந்திஜி தனது மனைவி கஸ்தூரி பாய் மரணமடைந்ததும் மனம் வெதும்பினார். ‘அவள் இல்லாமல் நான் எப்படி வாழ்வேன்’ என்று அழுதார். காந்திஜியின் வாழ்க்கைப் பயணத்தில் தனது 13 வயதில் இருந்து நடக்கத் தொடங்கிய கஸ்தூரி பாய் அம்மையாரை, கணவருடன் இணைத்து வெளியான ஸ்டாம்ப் எண்ணிக்கை மிக சொற்பம். இந்தியாவில் ஒரு சில ஸ்டாம்ப்களில் ஜோடியாக தோன்றினாலும், வெளிநாட்டு ஸ்டாம்ப்களில் ஒன்றில்கூட தம்பதியாக அவர்கள் காட்சிதரவில்லை.

காந்திஜிக்காக வெளிநாடுகள் காட்டன் துணி, பிளாஸ்டிக், தங்க இழை, அலுமினிய இழை போன்றவைகளிலும் ஸ்டாம்ப்கள் வெளியிட்டுள்ளன.

போர்ச்சுக்கீசிய குட்டித்தீவுகளில் குறிப்பிடத்தக்கவை செயின்ட் தாமஸ் மற்றும் பிரின்ஸ் தீவுகள். இவை மகாத்மாவை பெருமைப்படுத்தும் விதத்தில் அற்புதமான தபால்தலை ஒன்றை வடிவமைத்து வெளியிட்டது. அந்த ஸ்டாம்பில் இடம் பெற்ற காந்திஜியை உலகப்புகழ்பெற்ற ஓவியர் பிகாசோ வரைந்துள்ளார். மிகக் குறைந்த அளவிலே அச்சிடப்பட்ட அவை உலகத்தின் அபூர்வங்களில் ஒன்றாக போற்றப்படுகிறது.



பிகாசோ வரைந்து செயின்ட் தாமஸ் பிரின்ஸ் வெளியிட்ட தபால்தலை.

இந்தியா இதுவரை 45–க்கு மேற்பட்ட காந்திஜி உருவம் பொறிக்கப்பட்ட ஸ்டாம்புகளையும், 200–க்கு மேற்பட்ட சிறப்பு முத்திரைகளைக்கொண்ட தபால் உறைகளையும், அஞ்சல் அட்டைகளையும் வெளியிட்டிருக்கிறது.

போலந்து, காந்திஜிக்கு முதன் முதலில் அஞ்சல் அட்டை (போஸ்ட் கார்டு) வெளியிட்டு கவுரவப்படுத்தியது. முதன் முதலில் உருவத்துடன் கூடிய நினைவு உறை வெளியிட்டது, ருமேனியா நாடு. முதன்முதலில் காந்திஜி உருவத்துடன் கூடிய அஞ்சல் முத்திரை உருவாக்கி, குத்தி பயன்படுத்திய நாடு, மியான்மர். அப்போது அந்தநாடு பர்மா என்ற பெயரில் அழைக்கப்பட்டது.



காந்திஜியின் படத்துடன் போலந்து நாட்டில் வெளியிடப்பட்ட முதல் அஞ்சல் அட்டை.



பர்மா வெளியிட்ட காந்திஜி அஞ்சல் முத்திரை.



(இடம் பெற்றிருக்கும் அபூர்வ ஸ்டாம்புகள் அனைத்தும் கும்மிடிப்பூண்டி எம்.எல்.ராஜேஷ் சேகரித்தவை. தகவல்களும் அவர் கொடுத்தவை)

–அடுத்த வாரம், காந்திஜிக்காக வெளிநாடுகள் வெளியிட்ட அபூர்வ தங்க நாணயங்கள்.